பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4

30 07 2025 WEDNESDAY 12.40 PM

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து இந்தியா தெளிவான முடிவை எடுத்ததாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. வந்தேபாரத் ரயில் சேவை கடந்த மூன்றாண்டுகளில் அனைத்து மாநிலங்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. நாட்டின் எல்லைக்கோட்டுப்பகுதியில் ராணுவத்தினர் மேற்கொண்ட ஆபரேஷன் சிவசக்தி நடவடிக்கையில் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

4. ரஷ்யாவில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கம் காரணமாக, சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, பெரு மற்றும் ஈக்வடார் தீவுகளில் வெவ்வேறு நிலைகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. மக்காவ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்—

<<<<<<<<<>>>>>>>>>

மாநிலங்களவையில் இன்று பல்வேறு பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகள் எழுப்பிய அமளி காரணமாக, அவை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

காலை 11 மணிக்கு அவை கூடியதும், அவையின் துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ் கேள்விநேரத்தை நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் எழுப்பி அமளியில் ஈடுபட்டதால், நண்பகல் 12 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியதும், ஆபரேஷன் சிந்தூர் வெற்றித்தொடர்பான சிறப்பு தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது.

இதில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இந்த ராணுவ நடவடிக்கை குறித்து இந்தியா தெளிவான முடிவை எடுத்ததாக கூறினார்.

தீவிரவாத நடவடிக்கைகளை கண்டு இந்தியா ஒருபோதும் அஞ்சாது என்பதை உலகிற்கு காட்டும் வகையில், இது அமைந்ததாக அவர் கூறினார்.

தீவிரவாதம் வேரறுக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையை ஆபரேஷன் சிந்தூர் உலகிற்கு உணர்த்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவையில் தொடர்ந்து டாக்டர் திரு ஜெய்சங்கர் பேசி வருகிறார்.

மக்களவையில் தற்போது கேள்விநேரம் நடைபெற்று வருகிறது.

<<<<<<<<<>>>>>>>>>

வந்தே பாரத் ரயில் சேவை கடந்த மூன்றாண்டுகளில் அனைத்து மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தில் இதை தெரிவித்த அமைச்சர், தற்போது 144 வந்தேபாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த ரயில்களின் சேவைக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது ரயில்வேத்துறைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் பல இடங்களுக்கு வந்தே பாரத் ரயில் சேவை தேவை என கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும், இதனை பூர்த்தி செய்துதர வேண்டும் என்பதில் மத்திய அரசும் உறுதியுடன் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர் பயன்பெறும் வகையில், முன்பதிவில்லா பொது பெட்டிகளை அதிக அளவில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த திரு அஷ்வினி வைஷ்ணவ், கடந்த ஆண்டில் ரயில் விபத்துகளின் எண்ணிக்கை 77 சதவீதம் குறைந்துள்ளதாக தெரிவித்தார்.

2014-ஆம் ஆண்டு 135-ஆக இருந்த ரயில் விபத்துகளின் எண்ணிக்கை தற்போது 31-ஆக குறைந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரயில் பயணிகளின் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், கவாச் உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களையும், தானியங்கி ரயில் பாதுகாப்பு கட்டமைப்பையும் கொண்டுவந்துள்ளதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<<<<>>>>>>>>>

நாட்டின் எல்லைக்கோட்டுப்பகுதியில் ஊடுருவலை தடுக்க ராணுவம் மேற்கொண்ட ஆபரேஷன் சிவசக்தி நடவடிக்கையில் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

ராணுவத்திற்கு கிடைத்த புலனாய்வுத் தகவல் அடிப்படையில் தீவிரவாதிகளின் ஊடுருவலை வெற்றிகரமாக தடுக்க முடிந்தது என்று இந்திய ராணுவம் தனது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளது.

இதனிடையே, மேலும், இந்த ஊடுருவலில் ஈடுபட்ட ஒரு தீவிரவாதி கஷ்மீரின் Nogora பகுதியில் கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அந்த நபர் ஓட்டிச்சென்ற வாகனம் மற்றும் மூன்று கைத்துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<<<<>>>>>>>>>

அமர்நாத் யாத்திரை இன்று ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதனை தெரிவித்த கஷ்மீரின் காவல்துறை உயரதிகாரி திரு விஜய்குமார் பிதூரி, அமர்நாத் யாத்திரை செல்லும் பாதையில் கனமழை பெய்துவருவதையடுத்து, பஹல்காம் மற்றும் பால்தள் முகாம்களிலிருந்து இன்று யாத்திரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இன்று காலை முதல் அப்பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இதுவரை 3 லட்சத்து 93 ஆயிரம் பேர் யாத்திரை மேற்கொண்டு பனிலிங்கத்தை தரிசித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<<>>>>>>>>>

ரஷ்யாவின் Kamchatka தீபகற்பத்தையொட்டிய பசிபிக் பெருங்கடல் பகுதியில் இன்று கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 8 புள்ளி 8-ஆக பதிவானது

2011-ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்கு பிறகு ஏற்பட்டுள்ள மிக கடுமையான நிலநடுக்கம் இது என்று அமெரிக்காவின் புவியியல் ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

ரஷ்ய நாட்டு அரசின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்தியில், ரஷ்ய கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள துறைமுக நகரமான Severo Kurilsk-ல் மூன்று சுனாமி பேரலைகள் தாக்கியதாக தெரிவித்துள்ளது.

இதனால், துறைமுக கட்டமைப்பு பெரும் சேதத்துக்கு உள்ளானதாகவும், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல்கள் பேரலையால் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

அந்நகரின் கடற்கரைப்பகுதியில் 19 கிலோமீட்டர் தூரத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த கடுமையான நிலநடுக்கம் 136 கிலோமீட்டர் ஆழத்தில் தோன்றியதாகவும் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் அவ்வப்போது எரிமலை ஏற்படும் வாய்ப்பும் உள்ளதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம், ரஷ்யா, ஜப்பான் மற்றும் பசிபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள தீவு நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, பெரு மற்றும் ஈக்வடார் பகுதியில் அமைந்துள்ள தீவுகளுக்கும் சுனாமி எச்சரிக்கை வெவ்வேறு நிலைகளில் விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் வடக்கு கடலோரப்பகுதிகளில் சுனாமி அலைகள் 40 சென்டிமீட்டர் வரை எழுந்ததாகவும், பெரிய அலைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதால், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் பசிபிக் கடலோரப்பகுதிகளில் ஒரு மீட்டர் உயரம் வரை அலைகள் எழுந்தன.

ஜப்பான் நாட்டு அரசின் தலைமை அமைச்சரவைச் செயலர் Yoshinasa அலைகளால் இதுவரை எந்தவொரு சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஹவாய் தீவில் Honolulu மற்றும் Oahu பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஹவாய் ஆளுநர் திரு Josh Green மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று ஒத்துழைப்புத்தர வேண்டும் என்றும் சுனாமி குறித்து அச்சம் வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதையடுத்து, அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் அந்நாட்டு மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>>>

மத்திய அரசின் மக்கள் மருந்தகம் திட்டம் நாடு முழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தின்கீழ், குறைவான விலையில் மருந்துகளை பெற்று பயனடைந்து வருவதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(Sound Byte – பயனாளிகள் – 38 Sec.)

<<<<<<<<<>>>>>>>>>

சீனாவின் Zhejiang என்ற மாகாணத்தில் இன்று காலை ஏற்பட்ட கடுமையான சூறாவளியால் அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மாகாணத்தின் வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள அறிக்கையில், இந்த ஆண்டின் எட்டாவது கடும் சூறாவளி இது என்றும், அதிகபட்சமாக வினாடிக்கு 23 கிலோ மீட்டர் வேகத்தில் வீசியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூறாவளி வடகிழக்கு திசையில் மணிக்கு 20 கிலோமீட்டர் வேகத்தில நகர்ந்து, கிழக்கு சீன கடல்பகுதியை அடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<<>>>>>>>>>

பீகார் மாநிலத்தில் சுகாதார சேவைப்பணியில் ஈடுபடும் ஆஷா மற்றும் மம்தா தன்னார்வலர்களுக்கான தொகுப்பூதியத்தை அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் உயர்த்தி அறிவித்துள்ளார்.

ஆஷா பணியாளர்களுக்கான தொகுப்பூதியம் ஆயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

குடும்பக்கட்டுப்பாடு மற்றும் குழந்தைகள் நலன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திவரும் மம்தா தன்னார்வலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 300 ரூபாய் ஊக்கத்தொகை 600 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஊக்கத்தொகை ஒவ்வொரு குழந்தை பிறப்பை கவனிக்கும் மம்தா பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், கிராமப்பகுதிகளில் சுகாதார சேவைகள் தடையின்றி கிடைப்பதற்கு ஏதுவாக, அதிக அளவில் தன்னார்வலர்கள் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

இவர்களின் பணி மகத்தானது என்றும் அவர் பாராட்டினார்.

<<<<<<<<>>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

மக்காவ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-10, 21-11 என்ற செட் கணக்கில் தைவானின் *Yu Kai Huang* -ஐ வென்றார்.

இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் கபிலா – தனிஷா கிராஸ்டோ இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Dhakshineswar Suresh* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மெக்சிகோ சர்வதேச டென்னிஸ் போட்டியில இந்தியாவின் *Diva Bhatia* - இத்தாலியின் *Gala Arangio* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<<*END*>>>>>>>>